(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.196/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.2 (LW.4)

| | | |
|---|---|---|
| Name | : | நந்தினி |
| Father's/Husband Name | : | ரவி |
| Village | : | கிருஷ்ணம்பாளையம் |
| Taluk | : | ஈரோடு |
| Occupation | : | ஆடிட்டர் அலுவலத்தில் வேலை |
| Age | : | 23 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **18.08.2026.**

**முதல் விசாரணை:–**

கடந்த 12.05.2025ம் தேதி சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு நான் திருச்செங்கோடு மலைப்பாதையில் கிரிவலம் வந்தேன். மேற்படி மலைப்பாதையில் இருந்த ஆறுமுகநாத சுவாமி கோவிலில் விளக்கு போட்டுவிட்டு சாமி கும்பிட்டேன். நான் எனது கைபேசியை எனது ஹேன்பேக்கில் வைத்திருந்தேன். மேற்படி கோவிலில் கூட்டமாக இருந்ததால் யாரோ என் ஹேன்பேக்கை இழுப்பது போல் இருந்தது. கூட்ட நெரிசலாக இருந்ததால் ஹேன்பேக் தவறுதலாக யாராவது இழுத்திருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன். பின்னர் சாமி கும்பிட்டுவிட்டு வெளியே வந்து பார்த்போது ஹேன்பேக்கின் ஜிப் அவிழ்ந்திருந்தது. எனது IQ OOZ7 Pro 5 G என்ற கைப்பேசியை காணவில்லை. பின்னர் நான் அக்கம் பக்கத்தில்

தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனது அருகில் ஈஸ்வரி என்பவரும் அவரது கைப்பேசியை தேடிக்கொண்டிருந்தார். எங்களைப்போலவே நித்தீஷ் என்பவரும் அவரது கைப்பேசியை காணவில்லை என்று தேடிக்கொண்டிருந்தார். பின்னர் நாங்கள் அனைவரும் கோவிலில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது ஒரு நபர் சந்தேகப்படும்படி நின்றுகொண்டிருந்தார். ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார். நாங்கள் அனைவரும் ஆஜர் எதிரியிடம் சென்று விசாரித்தபோது அவர் இருசக்கர வாகனத்தில் தப்பிக்க முயன்றார். பின்னர் எங்களுடன் இருந்த நித்தீஷ் என்பவர் இருசக்கர வானத்தின் இருக்கையின் கீழ் இருக்கும் பெட்டியை திறந்து பார்த்தபோது அதில் மூன்று கைப்பேசிகள் இருந்தன. அந்த பெட்டியில் எனது கைப்பேசியும் இருந்தது. பின்னர் எதிரியை அழைத்துக்கொண்டு நானும், ஈஸ்வரி மற்றும் அசா.1 நித்தீஷ் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம். நித்தீஷ் என்பவர் புகார் அளித்தார். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது கைப்பேசியை வாங்கிக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள Blue நிறத்தில் உள்ள கைப்பேசி என்னுடையதுதான். அந்த புகைப்படம் (2 எண்ணிக்கைகள்) **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

ஈரோட்டில் நான் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்தது முதல் ஈரோட்டில் தான் வசித்து வருகிறேன். எத்தனை மணிக்கு கோவிலுக்கு வந்தேன் என்றால் மாலை 5.00 மணிக்கு கோவிலுக்கு வந்தேன். கோவிலை சுற்றிபார்த்துவிட்டு கோவிலுக்குள் செல்லும்போது 7.00 மணியிருக்கும். சம்வத்தன்று சித்ரா பவுர்ணமி என்பதால் கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். கிரிவலம் எவ்வளவு கி.மீ தூரம் சுற்றி வந்தேன் என்றால் 10 கி.மீ. தூரம் சுற்றி வந்தேன். நான் 10 கி.மீ. தூரம் சுற்றிவரும்போது எனது பேக்கில் இருந்த செல்போனை யார் எடுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால்

சரிதான். கிரிவலப்பாதையில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் அங்கு பணியில் இருந்த போலீசாரிடம் செல்போன் காணாமல் போனது பற்றி தெரிவித்தோமா என்றால் நானும், அங்கிருந்தவர்களும் தெரிவித்தோம். அங்கிருந்த போலீசார் என்னிடம் எனது பெயர் மற்றும் முகவரி, செல்போன் நெம்பரை வாங்கிக்கொண்டு எங்களை அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் அங்கு எதிரியை பார்த்தோம். அவரை விசாரித்தபோது அவரது வண்டியில் செல்போன் இருந்தது. எதிரியை போலீசாரிடம் ஒப்படைத்தோம். அதன்பிறகு என்ன செய்தேன் என்றால் மறுநாள் எனது செல்போனின் பில்லை எடுத்துச்சென்று காவல் நிலையத்தில் கொடுத்தேன். சம்பவ நாளில் காவல் நிலையத்திற்கு எப்படி சென்றோம் என்றால் எதிரியின் வாகனத்தில் எதிரியும் நித்தீஷ் என்பவரும் சென்றார்கள். மற்றொரு வாகனத்தில் ஈஸ்வரி என்பவர் சென்றார். நானும், எனது அம்மாவும் நடந்து சென்றோம். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் எதிரியும், நித்தீஷ் என்பவரும், ஈஸ்வரி மற்றும் நானும், எனது அம்மாவும் காவல் நிலையத்தில் இருந்தோம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்று வேறு ஒரு நபரை போலீசார் அடையாளம் காட்ட பொய்யான புகாரை கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் தனியாக புகார் அளித்தேனா என்றால் இல்லை. நானோ, ஈஸ்வரியோ, நித்தீஷோ சம்பவ நாளில் செல்போன் திருட்டு போன சமயத்தில் செல்போனை திருடிய நபரை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் இருசக்கர வாகனம் என்ன நிறமுடையது என்று எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ நாளில் எதிரி என்ன உடை அணிந்திருந்தார் என்று போலீசார் விசாரித்தபோது நான் சொன்னேனா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவ

இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல.  செல்போன் திருடிய நபர் யார் என்றே தெரியாமல் பிடிக்கப்பட்ட நபரை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.18 16:29:54 +0530